# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2097/19 - 2018 නොවැම්බර් මස 14 වැනි බදදා - 2018.11.14

***2097/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39(1) ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கற் கட்டளையை இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் கட்டளை பிறப்பிக்கப்பட்டு 2014, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1889/37 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிய 2014 ஆம் ஆண்டின் 332 ஆம் இலக்கக் கட்டளையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளதும் இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுமான காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உரித்தாக்கப் பட்டுள்ளது.

எனினும், அக்காணித் துண்டு உடைமை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை எனவே, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், 2014, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1889/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிய 2014 ஆம் ஆண்டின் 332 ஆம் இலக்கக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது குறிப்பு இல. : 4 - 3/12/2014/யூஎ/110.
பிர. செய. குறிப்பு இல. : கொ/ப்ராலේ/ඉඩම්/3/85/UDA.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர', காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2018, ஒற்றோபர் 25.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், கோட்டை (கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 20 - கோட்டை வட்டாரம்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.09.24 ஆந் திகதிய சீஓ/சீஓஎல்/2014/528 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு :

01. **துண்டு 'ஏ' - காணியின் பெயர் - சனாதிபதி மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 33, 33ஏ, 35, 35/1/1, 37 ஐ உடைய காணி - விஸ்தீரணம்: 0.0734 ஹெக்டயார்**

வடக்கு : சனாதிபதி மாவத்தை, சனாதிபதி மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 54 ஐ உடைய காணி ; கிழக்கு : சனாதிபதி மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 54 ஐ உடைய காணி, ஆஸ்பத்திரி வீதி ; தெற்கு: சனாதிபதி மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 41 ஐ உடைய காணியும் சனாதிபதி மாவத்தையும் ; மேற்கு : சனாதிபதி மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 41 ஐ உடைய காணி ஜனாதிபதி மாவத்தை.

11- 1240